IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

O.S.NO. - 151/2021

P.W.1 - திருமதி.ஷிவாலி

DATE - 19.01.2026.

குறுக்கு விசாரணை

எங்களுடைய திருமணம் காதல் திருமணம். நாங்கள் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள். நான் எனது கணவருடன் பெங்களூரில் இரண்டரை வருடமாக வசித்து வந்தேன். நான் மாமனார் மாமியார் எனது கணவருடன் பெங்களூரில் ஒரே வீட்டில் வசித்து வந்தோம். பெங்களூரில் நான் வசித்தபோது என் மாமனார் சம்பத் இருதயம் மற்றும் கிட்னி சம்மந்தப்பட்ட நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரி. நான் திருமண வீட்டிலிருந்தபோது வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே என் மாமனார் இருந்தார் என்றால் சரி. எனது மாமனார் 20 வருடமாக நோய்வாய்பட்டுக் கிடந்தார் என்றால் நிச்சயமாக அது பற்றி எனக்கு தெரியாது. நீண்ட நாட்களாக நோய்வாய்பட்டிருந்தார் என்றால் சரி. திருமணத்திற்கு முன்பு நானும் எனது கணவரும் IT கம்பெனியில் பெங்களூரில் ஒன்றாக வேலை செய்து வந்தோம். நான் தற்போதும் வேலை செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் நோய்வாய்பட்டிருநபோது எனது மாமியார் உணவு தயார் செய்து கொடுத்து வேலை பார்த்து குடும்பத்தை காப்பாற்றி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் நோய்வாய்பட்டிருந்தபோதும் 1ம் பிரதிவாதி தான் மிகவும் சிரமப்பட்டு எனது கணவரை BE படிக்க வைத்தார் என்றால் வீட்டினை வாடகைக்கு விட்டு அதில் வருமானத்தை வைத்து தான் படிக்க வைத்தார். வீட்டை 1ம் பிரதிவாதி வருமானத்தில் தான் கட்டி பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது சின்ன மாமனார் பலராமன் எனது மாமனாருக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்ததன் அடிப்படையில் எனது மாமனாருக்கு பெங்களூரு சொத்து வந்தது. விடுதலை பத்திரம் எழுதி கொடுக்க எனது

மாமனார் அவரது தம்பி பலராமனுக்கு பணம் கொடுத்தார் என்றால் சரி. அந்த பணத்தையும் 1ம் பிரதிவாதி தான் எனது மாமனாருக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது மாமனார் பலராமனுக்கு பணம் கொடுத்தது எந்த வருடம் என எனக்கு தெரியாது. எனது கணவர் 1992 ஆம் வருடம் பிறந்தார். விடுதலை பத்திரம் எழுதப்பட்ட ஆண்டு 2001 என்றால் சரி. அப்போது எனது கணவருக்கு சிறு வயது என்றும் விவரம் தெரியாது என்றால் சரி. எனதுமாமனாருக்கு கிட்னி உடல்நிலை பிரச்சனை காரணமாக ஒன்றரை வருடம் 1ம் பிரதிவாதியின் தாயார் வீட்டில் வைத்து CMC யில் சிகிச்சை எடுத்து வந்தார் என்றால சரிதான் ஆனால் 1ம் அயிட்டம் சொத்தில் வைத்து சிகிச்சை எடுத்து வந்தார்கள். பெங்களூரிலும் வேலூரிலும் மாற்றி மாற்றி வைத்து பார்த்தார்கள். அந்த காலக்கட்டத்தில் நானும் எனது கணவரும் பெங்களூரில் தனித்தனியாக இருந்துவந்தோம். மேல் வீட்டில் எனது நாத்தனார் தனியாக சமைத்து சாப்பிட்டார்கள். பெங்களூரு வீட்டில் ஆறு போர்ஷன் உள்ளது. நாங்கள் ஒரு போர்ஷனும், மாமனார் ஒரு போர்ஷனிலும் இருந்தோம் என்றால் ஒரே வீட்டில் தான் இருந்தோம். நாங்கள் இருக்கும்போது ஒரு போர்ஷன் மட்டும் காலியாக இருந்தது. பெங்களூரு வீட்டை வாடகைக்கு விட்ட வருமானத்தில் தான் குடும்பத்தை நடத்தி வந்தார்கள் என்றால் நானும் எனது சம்பளத்தை கொடுத்தேன். எனது திருமணத்திற்கு முன்பே 2ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் 1ம் பிரதிவாதியோடு ஒன்றாக வீட்டிலிருந்தோம் என்பதும் எனது சம்பளத்தை அவர்களுக்கு கொடுத்தேன் என்று சொல்வதும் பொய் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. அதற்கு தான் எனது மாமியார் தான் திருமணம் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் B.Comஐ 2024 சேர்ந்து தற்போது இறுதி ஆண்டில் படித்து வருகிறேன். வ.சா.ஆ.10 திருமண பத்திரிக்கையில் 2018 ஆம் ஆண்டு நான் B.Com படித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அப்போழுதே B.Com படித்து விட்டேன் என்றும் தற்போது வழக்கிற்காக B.Com படிப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் அயிட்டம் சொத்து 1ம் பிரதிவாதி எனது மாமியார் பெயரில் கிரைய சொத்து என்றால் சரி. 1ம் அயிட்டம் சொத்தின் விஷ்திரனம் மற்றும் சர்வே எண்ணை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. வ.சா.ஆ.3 1ம் அயிட்ட கிரைய சொத்து பற்றி எப்பொழுது கிரையம் பெற்றது என எனக்கு தெரியாது. 1ம் அயிட்ட சொத்து எனது மாமியாரின் கிரைய சொத்து என்பதால் அது அவருடைய தனிப்பட்ட

சொத்து என்றும் அதில் எனது கணவருக்கு எனது மாமியார் உயிருடன் உள்ள காலம் வரை எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. எனது மாமனார் தான் எனது மாமியார் பெயரில் அவருடைய பணத்தை கொண்டு சொத்தை வாங்கினார். 1ம் அயிட்டம் சொத்து 1ம் பிரதிவாதியினுடைய சுய ஆர்ஜிதமாக சம்பாதித்த பணத்தை வைத்து வாங்கப்பட்ட சொத்து என்றும் உடல் நோய்வாய் பட்ட எனது மாமனாரையே எனது மாமியார் தான் சம்பாதித்து காப்பாற்றினார் என்றும் 1ம் அயிட்டம் சொத்தில் நான் எனது கணவருடைய பாகம் என சட்டப்படி கோர இயலாது என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்தபின்னிட்டு பெங்களூர் சொத்திலோ, கே.வி.குப்பம் சொத்திலோ அனுபவத்தில் இல்லை என்றால் சரி. நான் அனுபவத்தில் இல்லாமல் சொத்துக்கு நீதிமன்ற கட்டணம் குறைவாக செலுத்தியதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு நானும் அவரது தாயாருமான 1ம் பிரதிவாதியும் முதல் நிலை வாரிசுதாரர்கள் என்றால் சரி. நான் பங்கை தவறாக கணக்கிட்டு தாவா தாக்கல் செய்துள்ளதை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பட்டது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 19.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.19 19:21:48 +0600

Additional District Judge(FTC),

Vellore.